# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

---

*[1988 ஜுலை மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது***

---

***1988, ஜுலை மாதம் 15 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது***

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

---

***கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.***

***விலை : சதம் 30*** ***தபாற் செலவு : சதம் 75***

1988 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்.

[1988 ஜூலை 15 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஒ. 34/85

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. பின்வரும் புதிய பிரிவானது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவினை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 73அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :— 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தில் 73அ என்னும் புதிய பிரிவினை உட்புகுத்துதல்.

"தேசிய வீடமைப்புத் திணைக்களத்தின் எல்லாச் சொத்துக்கள் முதலியனவற்றை அதிகாரசபைக்குக் கைமாற்றுதல்.

73அ. அமைச்சரினால் ஆக்கப்பட்டதும் கசெற்றில் வெளியிடப்பட்டதுமான கட்டளையொன்றில் குறித்துரைக்கப்பட்டவாறான—

(அ) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று தேசிய வீடமைப்புத் திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள (அசைவற்ற ஆதனம் உட்பட) அத்தகைய எல்லாச் சொத்துக்களும் ; அத்துடன்

(ஆ) தேசிய வீடமைப்புத் திணைக்களத்தினால் அல்லது திணைக்களத்துடன் செய்துகொள்ளப்பட்டனவும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளனவுமான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும்,

நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அதிகாரசபைக்குக் கைமாற்றப்படுதலும் உரித்தாக்கப்படுதலும் வேண்டும்.".

3. இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் உட்புகுத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 73அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட எல்லாச் சொத்துகளையும் ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் அத்தேதியிலிருந்து முதன்மைச் சட்டவாக்கத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு கைமாற்றும் பயனுடையதாதலும் வேண்டும். 73அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றின் கடந்த காலத்தையும் உள்ளடக்கும் பயன்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.